# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 33/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 11 |
| Name | : திரு. ஜி அசோகன் |
| Father/Husband's Name | : த/பெ. கோபாலன் |
| Village | : காவல் ஆய்வாளர் |
| Taluk | : மணிமங்கலம் காவல் நிலையம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.04.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை மாநகரம் மணிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2022 ம் தேதி செங்கல்பட்டு நகர காவல் நிலைய குற்ற எண்.365/2022 பிரிவுகள் 279, 304(ஏ) இதச வில் வழக்கு கோப்பினை செங்கல்பட்டு நகர காவல் நிலைய சிறப்பு உதவியாளர் பர்கத்அலி என்பவர் பதிவு செய்து மேல் விசாரணைக்காக எனக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மாலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ருக்மாங்கதன், தணிகைவேல் ஆகியோர்கள் முன்னிலையில் வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அதசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அன்றைய தினமே சாட்சிகள் கஜா, ருக்மாங்கதன், தணிகைவேல் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 31.07.2022 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள்

முன்னிலையில் இறந்த நபரான இந்திராணி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பின்பு காவலர் 2123 நாகராஜ் என்பவரிடம் பிரேத பரிசோதனை செய்ய கடிதம் கொடுக்கப்பட்டது. **நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு சாட்சிகள் பாண்டியன், துளசி, பிருத்திவி ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.வடிவேல் முருகன் அவர்களின் பார்வைக்கு மேல்விசாரணைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் என்றால் சரிதான். பேருந்து நிலையத்தை சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிலையத்தில் 12.00 – 01.00 மணியளவில் சுமார் 10 – 1 2 பேருந்துகள் நின்று கொண்டு இருக்கும் என்றால் சரிதான். பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள கடைக்காரர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லையென்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் பேருந்தின் நடத்துனரை சாட்சியாக விசாரிக்கவில்லையென்றால் சரிதான். அப்பேருந்தில் பயணம் செய்த பயணிகளை யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லையென்றால் நான் விசாரணைக்கு செல்லும் போது அப்பேருந்தில் பயணம் செய்த பயணிகள் யாரும் இல்லை அதனால் விசாரிக்கவில்லை.

பயணிகள் யாரும் விசாரணையின் போது இல்லையென்பதை வழக்கு ஆவணங்கள் மற்றும் சிடி பைலில் குறிப்பிடுள்ளேனா என்றால் இல்லை. வாகனத்தின் டிரிப்சீட்டை பார்வையிட்டால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் வாகனம் எங்கிருந்தது என்ற விவரம் தெரியவரும் எ'ன்றால் சரிதான். டிப்போ அதிகாரிகள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை டிரிப்சீட்டையும் ஆவணமாக தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். பார்வை மகசர், மாதிரி வரைபடத்தில் இரத்தம் தோய்ந்த இடம் குறிப்பிட்டு காட்டப்படவில்லையென்றால் சரிதான் சம்பவயிடம் மட்டும் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. இறந்த நபரான இந்திராணி என்பவருக்கு சுமார் 77 வயதிருக்கும் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் கடைசியாக இந்திராணியை உயிருடன் பார்த் நபர் ஆம்புலன்ஸ் டிரைவர் என காலம் எண்.4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆம்புலன்ஸ்

டிரைவரை விசாரித்தால் உண்மையில் விபத்து எங்கு நடந்தது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் டிரைவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் பொதுவாக ஆம்புலன்ஸ் டிரைவரை சாட்சியாக சேர்க்க இயலாது. இவ்வழக்கில் 1 முதல் 6 சாட்சிகள் அனைவரும் இறந்தவரின் உறவினர்கள் என்றால் சரிதான். விபத்தை நேரடியாக பார்த்தவர்களால் தான் விபத்து எவ்வாறு ஏற்பட்டது யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று தெரிய வரும் என்றால் சரிதான் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இந்த விவரத்தை நான் வழக்கு ஆவணத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கின் அனைத்து சாட்சிகளும் விபத்தை கேள்விப்பட்ட நபர்கள் என்றால் சரிதான்.

அந்த சாட்சிகளும் யார் மூலமாக விபத்தை கேள்விப்பட்டார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லையென்றால் சரிதான். பேருந்து நிலையத்தில் ஒரு போலிஸ் பூத் உள்ளது என்றால் சரிதான். அங்குள்ள காவலர்களை விசாரித்தால் விபதது நடந்த விவரம் தெரியவரும் என்றால் சம்பவத்தின் போது அந்த இடத்தில் காவலர்கள் யாரும் கிடையாது. காவலர் சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதால் நான் விசாரிக்கவில்லை. விபத்து அந்த இடத்தில் நடைபெறவில்லை என்றாலும், இறந்த நபர் எப்படி, எங்கு இறந்தார் என்பது யாருக்கும் தெரியாது என்றாலும், அதனால் தான் அதிக மக்கள் நடமாட்டம் இருந்த இடத்தில் விபத்தை யாரும் பார்த்ததாக சாட்சியம் கூறவில்லையென்றாலும், இறந்த நபருக்கு நஷ்ட ஈடு பெற்று தருவதற்காக பொய்யாக தாக்கல் செய்த வழக்கில பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் கூறியவாறு எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.